பல சொற்பொழிவுகள் டேப் செய்யப்பட்ட நிலையிலேயே உள்ளன. அவைகளை யெல்லாம் நூல் வடிவிலே கொண்டுவர அரசு முன்வருமா ? அத்துடன் புகழ்மிக்க வரலாற்று ஓவியங்களான மக்கள் கரமும் மன்னன் சிரமும், இரத்தம் பொங்கிய 20 ஆண்டுகள், ராபர்ட் ஓவனைப் பற்றிய இருளில் ஒளி, ஏகாதிபத்தியம் இன்றும்-அன்றும், போன்ற எத்தனையோ கட்டுரைகள் நூல் வடிவாக வெளிவரவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? இவ்வாறு நூல் வடிவில் வெளியிடாமல் இருப்பது தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் ஒரு குறை என்பதை அமைச்சர் அவர்கள் உணர்ந்து அவைகளை நூல்களாக வெளியிட முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அது தொடர்பாக தனிக்கேள்வி போட்டால் அதற்கும் பதில் சொல்லலாம்.

சோளிங்கர் நகர் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம்

*வினா எண் 802—திரு சி. கோபால் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், சோளிங்கர் நகரில் உள்ள வீடு கட்ட கடன் வழங்கும் கூட்டுறவு சங்கத்தில் 6 மாத காலமாக கடன் வழங்காமல் இருந்து வருவதை அரசு அறியுமா ?

(ஆ) மீண்டும் கடன் வழங்கி ஏழைகள் வீடு கட்ட வசதி ஏற்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) நகர்ப்புற கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களுக்கு வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும் ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து நிதியுதவி பெற்று தலைமைச் சங்கம் கடன் வழங்கி வருகிறது. 1980–81-ம் ஆண்டில் ஆயுள் காப்புறுதிக் கழகம் தலைமைச் சங்கத்தின் கடன் விண்ணப்பங்கள்பேரில் நிதி வழங்கத் தாமதமாகின்ற காரணத்தால், அரசு அளித்த முன் பணத்திலிருந்து (Ways and Means Advance) சோளிங்கர் நகர் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்திற்கு தலைமைச் சங்கம் 24–10–1980-ல் கடன் தொகை ரூ. 1,64,910 பட்டுவாடா செய்துள்ளது. மேலும் தாமதமின்றி சங்கத்தின் கடன் விண்ணப்பத்தின் மீது ஒப்பளிப்பு வழங்குமாறு ஆயுள் காப்புறுதிக் கழகத்தை அரசு நினைவூட்டியுள்ளது.

திரு. சி. கோபால் : தலைவர் அவர்களே, இந்த நிலைமையிலே சோளிங்கரிலே இருக்கின்ற வீடு கட்ட கடன் வழங்கும் சங்கம் கடந்த ஆண்டு எத்தனை பேர்களுக்குக் கடன் வழங்கியிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தகவல் தற்சமயம் என்னிடத்திலே இல்லை.

திரு. சி. கோபால் : தலைவர் அவர்களே, தற்சமயம் அதிகமாகக் கடன் வழங்க முடியாத நிலைமையில் அந்தச் சங்கம் இருக்கிறது என்று சொன்னாலும் வட ஆற்காடு மாவட்டத்திலே இருக்கின்ற அந்தச் சங்கத்தோடு செங்கை மாவட்டத்தைச் சேர்ந்த சில கிராமங்கள்—அங்கே உள்ள நிர்வாகிகளுக்குத் தேவையான ஊர் என்ற காரணத்தினாலே—சேர்க்கப்பட்டு அவர்களுக்கும் கடன் வழங்குகிற முறையிலே அந்த ஜூரிஸ்டிக்‌ஷனிலே சேர்த்து இருப்பதுபற்றி அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதைப்பற்றிய தகவல் என்னிடத்திலே இல்லை.

திருவில்லிப்புத்தூர் தொகுதியில் வறண்டு கிடக்கும் கிணறுகள்.

*வினா எண் 803—திரு இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் தொகுதியில் வறண்டு கிடக்கும் பம்பு செட்டு கிணறுகளை ஆழ்கிணறு, குழாய் இறவை திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை ஏதேனும் அரசு எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : இல்லை.

திரு இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் விடை இல்லை என்று சொல்லி விட்டார்கள். அது முற்றிலும் உண்மை. ஏனென்றால் இந்தக் கேள்வி விவசாய அமைச்சர் அல்லது சட்ட அமைச்சருக்குத்தான் வர வேண்டும். ஆனால் தொழிலாளர் நலத்துறை அமைச்சருக்குப் போட்டுவிட்டதால் இல்லை என்று அவர்கள் சொல்லி விட்டார்கள். ஆகவே, இந்தக் கேள்வியை மாற்றியமைத்தால் எனக்குப் பதில் நல்ல முறையில் கிடைக்கும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS